# கொங்குச் சீமை காணியாளர்கள்

(கொங்கு வேளாளர் தேசிய வரலாறு)

★

எழுதியவர்: கு. சேதுராமன்

(உரிமைப் பதிவு)

★

ஏர்முனை வெளியீடு-2
(முதல் பதிப்பு-1988)
விலை ரூ. 25/=

★

அச்சிட்டோர்:
குருகுலம் பிரிண்டர்ஸ்,
வேதாரண்யம்-614 810

★

கிடைக்குமிடம்:
வாணி நூலகம்
கச்சேரி வீதி, ஈரோடு - 638 001

## 3 சாத்தந்தை

சாத்தன் + தந்தை = சாத்தந்தை இலக்கண விகுதிப் படியான இந்தக் குலம் சங்ககாலச் சிறப்புப் பெற்று 3000 ஆண்டுகளுக்கு முன் தொண்டைநாட்டின் தென்பெண்ணை கரை வேணாட்டில் அடங்கிய காணியாளராவர்.

சாத்தாம்பாடியை தலைமையாகப் பெற்று வெண்ணை யூர் சடையப்பனின் தலைமையேற்ற இவர்கள் கம்பனின் மங்கல வாழ்த்துப் பெற்றனர் என வழங்கப்படுகிறது.

கலி 1051-இல் வேணாட்டு பிடாரிப் பெரியண்ணனைப் பின்பற்றிக் குளித்தலையில் நிலைகொண்டு ஆதிபத்திய நல்லூர் என்ற நங்கபுரத்தில் சாத்தாந்தையம்மன் ஆலயம் எழுப்பிக் காணிகொண்டனர் என ஆதிபத்திய நல்லூர் அதிய. சாத்தந்தை எனக் கூறும் அலகுமலைக் குறவஞ்சி சிறப்பிக்கின்றது.

இந்தக் குலத்தின் பெருமையைச் சுமந்து நிற்பவர்கள் பூந்துறை நாட்டதிபன் உலகுடை மன்றாடிகளும் இறவாப் புகழ் கொண்ட காளிங்கராயனும் ஆவர். காளிங்கராயன் அணை இன்றும் நம்கண் முன் சான்றளித்துக் கட்டியங் கூறி நிற்கிறது. இதன் விபரங்களை முன் பகுதியில் காணலாம்.



உறையூர் சோழன் சீதனமாக அனுப்பிய 8000 தலைக் கட்டுகளுடன் காங்கேய நாட்டில் குடியேறினர். தளபதி சரவணமதன் கொடுவாய் போரில் உறையூர் சோழனுக்கு வெற்றிதேடிக் கொடுத்ததற்குப் பரிசாக உலகாயனூர் காணியும், "உலகுடைய மன்றாடி" என்ற சிறப்புப் பட்டமும் கிடைத்தன.

தானமாக அளிக்கப்பட்டவைகளின் பலன்களை அனுபவிக்கக் கூடாது என்ற கொள்கைப்படி சாத்தந்தை குலத்தார் காளிங்கராயன் வாய்க்காலின் தண்ணீரையோ மகசூலையோ இன்றுவரை அனுபவித்ததில்லை.

கலி 807 குலோத்துங்க சோழன், கொத்துமுடிப் பாண்டியர்களுடன் குலம் வகுக்கும் நாளில் மங்கைமணி வெள்ளோடை சாத்தந்தை குல உலகுடைய மன்றாடிக்கு ஆவணி 10 செவ்வாய் அன்று வெள்ளோடு, காங்கயம், விஜயமங்கலம், காரத்தொழுவு, பாலமேடு இவற்றைக் காணியாக்கி, அல்லாள புரத்தில் கஜம் எனும் ஆனைகட்டி முன் கையில் சந்தனமறைத்த தேவணன் முத்திபெற்றான். மகிபன் துணைபெற்ற திருமலைச் சரவண மன்றாடிக்கு மூவேந்தர் முடிசூட்டினர்.

உலகபுரம் கரை, கனகபுரம்கரை, தேவணம்பாளையம் கரை இம்மூன்றிலும் முறையே 111, 53, 49 கிராமங்கள் உள்ளன. இங்குள்ள இராஜாக்கோவில் என்ற அண்ணன்மார் சுவாமிகோவிலுக்கு இந்த 213 கிராமத்தாரும் உரியவர்கள்.

ஆதிபத்திய நல்லூர், உலகாயனூர், அல்லாளபுரம் ஊத்துக்குளி, விஜயமங்கலம், வீரபாண்டி, வெள்ளோடு, நாகம்பள்ளி, குன்னத்தூர், வெள்ளக்கோவில், மண்ணறை இவர்களின் காணிகள்.

அகத்தூர் அம்மன், சர்வலிங்கீஸ்வரர், பெருமாள், இராஜாக்கோவில், ஆயிஅம்மன், பொன்காளியம்மன், செல்லாண்டியம்மன், கருமலையான், முத்தண்ணன்பாளையம், அங்காளம்மன், நாகம்பள்ளி கருப்பண்ணசாமி இவர்களின் காணித் தெய்வங்கள்.